பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

108

செந்தமிழறிஞர்கள்

ISBN : 978-81-686742-0-2





'மகாவித்துவான்"
மீனாட்சி சுந்தரனார்

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

https://www.annacentenarylibrary.org/pages/view/6-%E0%AE%AE%E0%AE%95%E0%AE%BE%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%81%E0%AE%B5%E0%AE%BE%E0%AE%A9%E0%AF%8D-%E0%AE%AE%E0%AF%80%E0%AE%A9%E0%AE%BE%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9A%E0%AE%BF-%E0%AE%9A%E0%AF%81%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%B0%E0%AE%A9%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D_1815-

செந்தமிழ்சிற்பிகள்

'மகாவித்துவான்' மீனாட்சி சுந்தரனார் (1815 - 1876)



அறிமுகம்

பிற்காலக் கம்பர் என்று போற்றப்பட்ட, தமிழ் அறிஞர் ‘மகாவித்வான்’ மீனாட்சிசுந்தரம், திருச்சி அருகேயுள்ள எண்ணெயூரில் 1815-இல் பிறந்தார். அபார நினைவாற்றல் கொண்டிருந்த இவர், பாடல்களைப் படித்த வேகத்தில் மனதில் பதிய வைத்துக் கொண்டு விடுவார். சிறுவயதிலேயே

யாப்பிலக்கணத்துக்கு தக்கபடி, செய்யுள் புனையும் ஆற்றல் பெற்றவர். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்திலக்கணங்களையும் அம்பலவாண முனிவர், கீழ்வேளூர் சுப்பிரமணிய பண்டாரம், காஞ்சிபுரம் சபாபதி முதலியார், 'தண்டியலங்கார' பரதேசியார் ஆகியோரிடம் பல்வேறு காலகட்டங்களில் பாடம் பயின்றவர். 19-ஆம் நூற்றாண்டில் தமிழில் அதிக நூல்களை இயற்றியவர் இவரே.

தமிழ் மற்றும் இலக்கியப் பணி

- இசையில் பற்றுக் கொண்டிருந்த உ.வே.சா வை தமிழில் ஆர்வம் கொள்ள செய்தது இவரின் சிகரமான தமிழ்த்தொண்டு .
- தமிழ் கற்பிப்பதையே தனது தொழிலாகக் கொண்டார். தனது குடும்பம் வறுமையில் உழன்ற போதும் நாடி வந்த மாணாக்கர்களுக்கு உறைவிடத்துடன் உணவும் அளித்து தமிழ் போதித்த பெருந்தகையாளர்.
- உ.வே.சாமிநாதர், குலாம்காதர் நாவலர், சோடசாவதானம் சுப்பராயர், பூவாளூர் தியாகராயர், சவுரி ராயலு ஆகியோர் இவரின் மாணவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.
- தமிழ் மொழியில் இவரே அதிக எண்ணிக்கையிலான தல புராணங்களைப் பாடியவர். நூற்றுக்கும் மேற்பட்ட சிற்றிலக்கியங்கள் இவரால் பாடப் பெற்றுள்ளன.

படைப்புகள்

- இவர் பாடிய திருநாகைக் காரோணப் புராணமும், மாயூரப் புராணமும் பெருங்காப்பியங்களாகப் போற்றப்படும் சிறப்பு மிக்கன.
- தலபுராணங்களும், பதிகங்களும், அந்தாதிகளும், இறைவன்-இறைவி மீது பிள்ளைத்தமிழ், கலம்பகம், கோவை, உலா, தூது, குறவஞ்சி முதலான நூல்களும் இயற்றினார்.

- திருவானைக்காத் திருவந்தாதி, வாட்போக்கிக் கலம்பகம், சீர்காழிக் கோவை, அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழ்.
- இவர் எழுதியவற்றில், ‘குசேலோபாக்கியானம்’ என்ற காப்பியமும், ‘சேக்கிழார் பிள்ளைத் தமிழ்’ என்ற பிரபந்தமும், ‘ஆதி குமரகுருபர சுவாமிகள் சரித்திரம்’ என்ற வாழ்க்கை வரலாறும் பிரதானமானவை.
- சைவ எல்லப்ப நாவலர் இயற்றிய ‘செவ்வந்திப்புராணம்’ என்னும் நூலைப் பதிப்பித்தார்.
- மாயூரம் வேதநாயகம் அவர்களிடம் கொண்டிருந்த நெருங்கிய நட்பின் காரணமாக, அவரைப்பாராட்டிக் ‘குளத்துக்கோவை’ என்னும் நூலை இயற்றினார்
- இவர் செய்துள்ள மொத்த நூல்கள் ஏறத்தாழ 80. இவருடைய முதன்மைச் சீடரான தமிழ்த்தாத்தா உ.வே.சா. மீனாட்சி சுந்தரனாரின் 5,021 பாடல்களைப் பாதுகாத்து வழங்கி உள்ளார்.
- உ.வே.சா. இவரது படைப்புகளுள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து 'ஸ்ரீமீனாட்சி சுந்தரம்பிள்ளை பிரபந்தத் திரட்டு' என்ற தொகுப்பை வெளியிட்டார்.

விருதுகள்/பட்டங்கள்/சிறப்புகள்

- ஆதீனகர்த்தர் அம்பலவாண தேசிகர் இவருக்கு ‘மகாவித்துவான்’ என்ற பட்டத்தை வழங்கி மகிழ்ந்தார்.
- பத்தொன்பதாம் நூற்றாண்டின் கம்பன், இணையிலாப் புலவன், புலவர்களின் புலவன், மெய்ஞானக் கடல், நாற்கவிக்கிறை, சிரமலைவாழ் சைவசிகாமணி முதலிய முப்பதுக்கும் மேற்பட்ட பட்டங்களையும் விருதுகளையும் பெற்றவர்.

(😊)(😊)(😊) @@@@@@ (😊)(😊)(😊)

மகா வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை (1815–1876) 19-ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த தமிழ் அறிஞர், ஆசிரியர் மற்றும் கவிஞர் ஆவார். உ.வே. சாமிநாதையரின் ஆசிரியரான இவர், 'பிற்காலக் கம்பர்' எனப் போற்றப்பட்டார். திருவாடுதுறை ஆதீன வித்வானாக விளங்கிய இவர், 90-க்கும் மேற்பட்ட தலபுராணங்கள், பிரபந்தங்கள் மற்றும் பிள்ளைத்தமிழ் நூல்களை இயற்றியவர்.

முக்கிய தகவல்கள்:

- **பிறப்பு:** திருச்சிராப்பள்ளி அருகிலுள்ள எண்ணெயூரில் 1815-ல் பிறந்தார்.
- **சிறப்பு:** அபார நினைவாற்றல் கொண்டவர், பாடல்களை உடனே மனப்பாடம் செய்யும் திறன் படைத்தவர்.
- **கல்விபணி:** திருவாடுதுறை மடத்தின் தலைமைப் புலவராகத் திகழ்ந்தார். மயிலாடுதுறையில் தங்கி பல மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார்
  .
- **படைப்புகள்:** 90-க்கும் மேற்பட்ட தல வரலாறுகள் (தலபுராணம்), 65-க்கும் மேற்பட்ட நூல்கள் (உலா, கலம்பகம், பிள்ளைத்தமிழ், தூது) எழுதியுள்ளார். அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ் இவரது குறிப்பிடத்தக்க படைப்பு.
- **மாணவர்கள்:** உ.வே. சாமிநாதையர், சோடசாவதானம் சுப்பராய செட்டியார், பூவாளுர் தியாகராய செட்டியார் உள்ளிட்ட பலர் இவரது மாணவர்கள்.
- **மறைவு:** பிப்ரவரி 1, 1876-ல் காலமானார்.

இவர் எழுதிய தலபுராணங்கள் மற்றும் பிரபந்த நூல்களைப் பற்றிய விரிவான தகவல்களை **Tamil Digital Library** தளத்தில் காணலாம்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை

ஒரு தனி மனிதன் ஒரு பல்கலைக்கழகமாகத் திகழ முடியும் என்பதை 19 ஆம் நூற்றாண்டில் நிறுவிக்காட்டிய பெருந்தமிழ் அறிஞர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை. 'பிற்காலக் கம்பர்'

என்று இவரைத் திறனாய்வாளர்கள் போற்றுவர். படித்தல், பாடம் சொல்லுதல், நூல்கள் யாத்தல் என்பனவற்றையே வாழ்வாகக் கொண்டிருந்த இவர் இயற்றிய தல புராணங்கள் பல. 19-ஆம் நூற்றாண்டு வரை தலபுராணம் பாடப்பெறாத சிவதலத்தில் வாழ்ந்திருந்த சைவ அன்பர்களும், பெருஞ்செல்வர்களும் இவரைத் தம் ஊருக்கு அழைத்துச்சென்று, பெருஞ்சிறப்புகள் செய்து தம் ஊருக்குத் தலபுராணங்கள் ஆக்கித் தருமாறு வேண்டிப் பெற்றனர். தமிழ் மொழியில் இவரே அதிக எண்ணிக்கையிலான தல புராணங்களைப் பாடியவர். நூற்றுக்கும் மேற்பட்ட சிற்றிலக்கியங்களும் இவரால் பாடப் பெற்றுள்ளன. இவர் பாடிய **திருநாகைக் காரோணப் புராணமும், மாயூரப் புராணமும்** பெருங்காப்பியங்களாகப் போற்றப்படும் சிறப்பு மிக்கன.

- **பெருமித வாழ்வு**

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, பாண்டிய நாட்டில் வாழ்ந்திருந்த மரபுவழித் தமிழ்ப்புலவர் சிதம்பரம் பிள்ளை என்பவர் மகவாக, சோழ நாட்டுக் **காவிரித் தென்கரையில் உள்ள சிற்றூர் எண்ணெயூரில்** பிறந்தார். கி.பி. 1815 இல் பிறந்த இவர் தம் தந்தையாரிடமே தமிழ் கற்றுச் சிறந்தார். இளவயதிலேயே காவேரி என்ற நற்குணநங்கையை மனைவியாக அடைந்து திருச்சிராப்பள்ளியில் குடியேறினார். சென்னை சென்று காஞ்சிபுரம் சபாபதி முதலியார் முதலியோரிடம் பாடம் கேட்டுப் புலமை வளம் பெற்றார். திருச்சிராப்பள்ளியில் தம்மை நாடிவந்த ஆர்வலர்களுக்குத் தமிழ் கற்பித்தார். திருவாவடுதுறை சென்று 15ஆவது குருமகா சந்நிதானமாக விளங்கிய அம்பலவாண தேசிகரிடம் ஞானநூல்களைக் கற்றறிந்தார். பிற்காலத்தே இவரிடம் தியாகராசச் செட்டியார், உ.வே.சாமிநாத ஐயர், குலாம் காதர் நாவலர், சவுரிராயலு நாயக்கர் முதலிய பெரும்புலவர்கள் பாடம் கேட்டுச் சிறந்தனர்.

6.6.1 மாயூரப்புராணம்

அக்காலத்தில் சீகாழியில் முன்சீப்பாகப் பணியாற்றிய வேதநாயகர் என்பவரோடு மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கு நட்பு மலர்ந்தது. பின் மயிலாடுதுறையில் நெடுநாள் தங்கியிருந்து மாணாக்கர்களுக்குத் தமிழ் கற்பித்தார். திருவாவடுதுறை ஆதீனத்தலைவர் அம்பலவாண தேசிகர் இவருக்கு மகா வித்துவான் என்ற பட்டம் அளித்துப் பாராட்டினார். நந்தனார் சரித்திரக் கீர்த்தனை இயற்றிய கோபால கிருஷ்ண பாரதியார் இவர் காலத்தில் வாழ்ந்தவர். இவர் 1876 இல் இவ்வுலக வாழ்வை நீத்தார். இவரது விரிவான வாழ்க்கை வரலாற்றை மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம் என்ற தலைப்பில் உ.வே.சாமிநாத ஐயர் உரை நடையில் ஒரு நூல் எழுதி வெளியிட்டார்.

இவர் மயிலாடுதுறையில் தங்கியிருந்த போது அன்பர்கள் வேண்டுகோளை ஏற்று இவர் மாயூரப் புராணம் பாடி அரங்கேற்றினர். இவர் இயற்றிய மாயூரப்புராணம் 1895 செய்யுட்களால் அமைந்துள்ளது. 64 படலங்கள் இந்நூலுள் இடம் பெற்றுள்ளன.

• மாயூரத்தலச் சிறப்புகள்

மயிலாடுதுறை என்ற பழம் பெயர் கொண்ட நகரம் பிற்காலத்தில் மாயூரம் என்று மருவியது. காவிரி வடகரை பாடல் பெற்ற சிவத்தலங்களுள் ஒன்று. இறைவர் மாயூரநாதர். அம்மை அம்சொல்நாயகி. அபயாம்பிகை என்பதே பெருவழக்கு. திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடியுள்ள தலம். அருணகிரியாரின் திருப்புகழும் இத்தலத்திற்கு உண்டு. கிருஷ்ண ஐயர் என்பார் பாடிய அபயாம்பிகைச்சதகம் என்ற நூல் அம்மை அருள் திறம் உரைக்கும் நயம்மிக்கது. ஐப்பசி மாதம் முழுவதும் இத்தலத்தில் 'துலா உற்சவம்' நடைபெறும். மாதக் கடைசி நாளில் நடைபெறும் 'கடை முகம்' என்ற நீராட்டுப் பெருஞ் சிறப்பு மிக்கது. மயிலாடுதுறையைச் சுற்றிலும் பாடல்பெற்ற சிவத்தலங்கள் பல உள்ளன. இத்திருக்கோயில் பெருமை குறித்து அமைந்த தலபுராணமே மாயூரப்புராணம் என்பது. வடமொழியில் நிலவியிருந்த **மாயூர மான்மியம்** என்ற நூலையே தாம் தமிழில் செய்துள்ளதாக ஆசிரியர் குறித்துள்ளார். அவையடக்கப் பகுதியில் 9 செய்யுள்கள் இடம் பெற்றுள்ளன.

6.6.2 அவையடக்கம்

உமையம்மை மயில் உருக்கொண்டு சிவபெருமானைப் பூசித்த தலம் இது. காகம் ஒன்றும் ஒருகால் சிவ பெருமானை அன்புடன் பூசித்துப் பேறு பெற்றது என்பது புராண வரலாறு. அவையடக்கத்தில் இவற்றை நினைவு கூரும் ஆசிரியர், மயிலின் பூசையை ஏற்றருளிய மயூரநாதப் பெருமான், காகத்தின் பூசையையும் ஏற்றருளிய கருணையாளன் என்பதால், பெருங்கவிஞர்களின் பாமாலைகளைச் சூட்டிக் கொண்டு மகிழ்ந்த பெருமானுக்கு என் புன்கவியும் ஏற்புடையதாகவே அமையும் என்று அமைதி காட்டுகிறார்.

சோழ நாட்டின் ஐந்திணை வளம் கூற விரும்பும் ஆசிரியருக்கு இப்பகுதியில் மலைகள் இல்லையே என்ற ஏக்கம் மிகுகிறது. எனினும் வேறுவகையில் தம் கற்பனைத் திறத்தால் அதனை ஈடு செய்கிறார். சோழநாட்டில் திரிசிராமலை (திருச்சி மலைக்கோட்டை), எறும்பியூர் (திருவெறும்பூர்), வாட்போக்கி மலை, சுவாமிமலை என்பன உள்ளமையால் இங்கே குறிஞ்சி வளமும் உண்டு என்று நயம்பட

உரைக்கிறார்.

• **ஆசிரியர் - புலமை நலம்**

மாயூரம் நகரில் கருப்பங்காடுகளும், மாஞ்சோலைகளும் செறிந்திலங்கும் திறம் (நிலை) திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் அடியவர் கூட்டங்களுடன் கலந்திருத்தலை நினைவூட்டுவதாகக் காட்டுகிறார். காசி, குருச் சேத்திரம் முதலான தலங்களைவிட மாயூரம் மேம்பட்ட தலம் என்பதனைச் சுட்டுகிறார்.

• **தொன்னூல் பயிற்சி**

திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் புலமை மாட்சி வியப்பூட்டும் பெருமிதம் மிக்கது. சங்க நூல்கள், காப்பியங்கள், அற நூல்கள், சித்தாந்த சாத்திரங்கள், பேருரைகள், சிற்றிலக்கியங்கள் என அவர் கல்லாத தொன்னூல்களே இல்லை என்பதை அவர் நூல்களால் அறிய முடிகிறது. சிலப்பதிகாரத்தில் அமைந்துள்ள ஆய்ச்சியர் குரவையை ஒட்டி முருகவேளைப் புகழ்ந்து அவ்வாறே ஒரு பாடல் செய்கிறார்.

கடியேறு மலரோனைக் கடுஞ்சிறையில் வைத்துப்
படியாதி எவ்வுலகும் படைத்தருளும் பிரானை
முடியாத முதலோனை மூவர் பெருமானை
வடிவேலன் தனைப்பேசா வாய் என்ன வாயே
வள்ளி மணவாளனைப் பேசா வாய் என்ன வாயே

(அகத்தியர் பூசைப்படலம் - 22)

(**கடி** = மணம், **படி** = உலகம், **பிரான்** = தலைவன்)

திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை

https://shaivam.org/devotees/tirisirapuram-mahavidwan-meenakshi-sundaram-pillai/#gsc.tab=0

பிறப்புமீனாட்சி அருள்மழை பொழியும் மதுரையில் வாழ்ந்தவர்கள் சிதம்பரம் பிள்ளை - அன்னத்தாச்சி தம்பதியர். சிதம்பரம் பிள்ளை மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயிலில் மீன் முத்திரையிடும் பணி செய்துவந்தார். திருக்கோயில் நிர்வாகத்தோடு கருத்து வேறுபாடு

ஏற்பட்டதால் அங்கிருந்து கிளம்பி, திருச்சிக்கு மேற்கே காவிரியின் தென்பாலுள்ள எண்ணெய் மாகாணம் என்னும் ஊரில் வந்து தங்கினார். குடும்பம் அதவத்தூரில் இருந்தபோது, ஸ்ரீபவ ஆண்டு பங்குனித் திங்கள் 26-ம் நாள் (06.04.1815), வியாழக்கிழமை, அபர பட்சம் துவாதசி திதியும் பூரட்டாதி நட்சத்திரமும் கூடிய நன்னாளில், மகர லக்கினத்தில், அன்னத்தாச்சி ஓர் ஆண் மகவை ஈன்றெடுத்தார்.ஆலவாய் அண்ணலின் பெயரையே குழந்தைக்குச் சூட்டி மகிழ்ந்தனர் பெற்றோர். அதன் பின் குடும்பம் சோமரசம்பேட்டைக்குக் குடிபெயர்ந்தது. கல்விதனயனுக்கு தந்தையே குருவும் ஆனார். அவரிடம் மீனாட்சிசுந்தரம், நெடுங்கணக்கு, ஆத்திச்சூடி, அந்தாதிகள், கலம்பகங்கள், பிள்ளைத்தமிழ் நூல்கள், சதகங்கள், நிகண்டுகள், கணிதம் ஆகியவை மட்டுமல்லாது, நன்னூல் போன்ற இலக்கண நூல்களைக் கற்றுத் தேர்ந்தார். இளமையிலேயே நன்னூல் முழுவதும் அவருக்கு மனனம் ஆகி இருந்தது. யாப்பிலக்கணத்துக்கு தக்கபடி, செய்யுள் புனையும் ஆற்றல் அவரிடம் இருந்ததை தந்தை கண்டுகொண்டார். அதை தன்னால் இயன்றவரை மேலும் வளப்படுத்தினார். தந்தை அறிவுறுத்தியபடி பிறகு மலைக்கோட்டை மௌனமடம் வேலாயுத முனிவரிடம் பாடம் கேட்டார்.திருவாவடுதுறை ஆதீனம் 14-வது பட்டம் வேளூர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர், ஸ்ரீ சிவாக்கிர யோகிகள் மடத்தின் தலைவராக பிற்காலத்தில் ஆனவரான அம்பலவாண முனிவர், கீழ்வேளூர் சுப்பிரமணிய பண்டாரம், காஞ்சிபுரம் சபாபதி முதலியார், 'தண்டியலங்கார' பரதேசியார் ஆகியோரிடம் பல்வேறு காலகட்டங்களில் பாடம் கேட்டார்.திருவம்பலம் தின்னமுதம் பிள்ளை, மழவை மகாலிங்கையர் போன்ற தமிழ்ப் புலவர்களை அணுகி தக்க மரியாதை செலுத்தி அவர்களிடம் அளவளாவி தமிழ் இலக்கணம், இலக்கியம் தொடர்பான சந்தேகங்களைத் தீர்த்துக் கொண்டார்.துறை மங்கலம் சிவப்பிரகாசர்,

காசிமடம் குமரகுருபரர், சிவஞான முனிவர், அதிவீரராம பாண்டியர் ஆகியோரின் பாடல்களில் மனதைப் பறிகொடுத்த அவர், கம்ப ராமாயணம், கல்லாடம், சேக்கிழாரின் பெரிய புராணம், சைவத் திருமுறைகள் ஆகியவற்றிலும் ஆழ்ந்து அனுபவித்தார். தனது இலக்கண, இலக்கியத் தேர்ச்சியை மாணவர்களுக்கு அள்ளி வழங்கினார்.மண வாழ்க்கை:இவரது 15-வது வயதில் தந்தை காலமானார். அதன் பின் உறவினர்கள், காவேரியாச்சி என்ற பெண்ணை இவரது வாழ்க்கைத் துணைவியாக அமைத்தனர். இவர்களது மகன் சிதம்பரம் பிள்ளை.தமிழ்ப் புலவர்களைக் கண்டு உரையாடுவதற்கும், தம் ஐயங்களைப் போக்கிக் கொள்வதற்கும் வாய்ப்பாகத் திரிசிரபுரம் (தற்போதைய திருச்சி) செல்லத் தீர்மானித்தார். திருச்சி மலைக்கோட்டை கீழவீதியில் குடியேறினார். அங்கு, முத்துவீரியம் என்னும் இலக்கண நூலைச் செய்த முத்துவீர வாத்தியார், திரிசிரபுரம் சோமசுந்தர முதலியார் முதலான புலவர்களுடன் அளவளாவும் வாய்ப்பைப் பெற்றார். வெளியூர்ப் புலவர்கள் இவரைத் 'திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை' எனக் குறிப்பிட்டனர்.எழுது, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்திலக்கணங்களையும் தக்கவரிடம் பாடங்கேட்ட அவர், தமிழ் கற்பிப்பதையே தனது தொழிலாகக் கொண்டார். பலருக்குக் கற்பித்த காலத்திலும் தன்னைவிட புலமையானோரிடம் பாடம் கேட்பதை அவர் தொடர்ந்தார்.திருவாவடுதுறை அம்பலவாண முனிவரிடம் கம்பரந்தாதியையும் கீழ்வேளூர் சுப்பிரமணிய தேசிகரிடம் குட்டித் தொல்காப்பியம் என்று அழைக்கப்படும் இலக்கண விளக்கத்தையும் பாடங்கேட்டார். இதனால் அவர் தமிழ்ப் புலமை மேலும் சிறப்புற்றது.தனது 21-வது வயதில், திரிசிரபுரம் செட்டி பண்டாரத்தையா என்பாரிடம் சிவ தீட்சையும் க்ஷணிகலிங்க தாரணமும் பெற்றார். அன்று முதல் அவரை வெண்ணீறு வேந்தராகவே தமிழகம் வாழ்நாள் முழுவதும் கண்டது.நூல்களைக் கற்றுணர்ந்தவர்களிடம் முழுமையாகப் பாடம் கேட்டல்


என்ற நியதி இருந்த காலம் அது. அக்காலத்தில் வாழ்ந்த பிள்ளையவர்கள், மாணவர்களுக்கு உண்ணும் நேரமும், உறங்கும் வேளையும் தவிர, நாளின் எல்லா நேரங்களிலும் பாடம் சொல்வதையே வாழ்வின் பயனாகக் கருதினார். பண்டைய குருகுல முறையில், மாணவர்களிடமிருந்து கட்டணம் ஏதும் பெறாமல் அவர்களுக்கு உணவும், உறையுளும் வழங்கி தமிழ்க் கல்வியைத் தழைக்கச் செய்து, தமிழுணர்வைச் செழிக்கச் செய்தார்.தன்னிடம் பாடம் கற்கும் மாணவர்களை தனது புதல்வர்களாகவே கருதி பாடம் கற்பிப்பார் பிள்ளையவர்கள். இவரது அறிவுத்திறன் அறிந்து உதவிய நல்லோரின் உதவியால் தனது ஆசான் பணியைக் குறைவறச் செய்தாலும், இவரால் குடும்பம் வசதியாக வாழ முடிந்ததில்லை. அதைப் பற்றி அவரும் அக்கறை கொண்டதில்லை.தல புராணங்கள் இயற்றல்:அக்காலத்தில் புகழ் பெற்ற கோயில்களுக்கு தல புராணம் எழுதும் வழக்கம் இருந்தது. அதை அடியொற்றி, பிள்ளையவர்களும், நெருங்கியவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி பல திருக்கோயில்களுக்கு தல புராணங்களை இயற்றினார்.அதுவரை வழக்கத்தில் இருந்த தல புராணங்களுக்கு மாற்றாக, அற்புதமான தமிழ் நடையில், கற்பனைச் செழிப்பும், கருத்து வளமும், உவமை நயமும், திருத்தலப் பெருமையை தெளிவாக விளக்கும் நூல்நயமும் கொண்டதாக இவர் எழுதிய தல புராணங்கள் அமைந்தன. இதனால் பிள்ளையவர்களின் புகழ் பரவியது.சிற்றிலக்கியம் எனப்படும் பிரபந்தங்களில் சிறந்த தேர்ச்சி பெற்றவரான பிள்ளையவர்கள், தனது காலத்தில் அருகிய இந்த இலக்கியங்களுக்கு புத்துயிருட்டினார். பல சிவத்திருத்தலங்களுக்குச் சென்று, அத்தலங்களைப் பற்றித் தலபுராணங்களும், பதிகங்களும், அந்தாதிகளும், அங்குள்ள இறைவன்- இறைவி மீது பிள்ளைத்தமிழ், கலம்பகம், கோவை, உலா, தூது, குறவஞ்சி முதலான நூல்களும்

இயற்றினார்.பிள்ளையவர்கள்
எழுதியவற்றில், 'குசேலோபாக்கியானம்' என்ற காப்பியமும், 'சேக்கிழார் பிள்ளைத் தமிழ்' என்ற பிரபந்தமும், 'ஆதி குமரகுருபர சுவாமிகள் சரித்திரம்' என்ற வாழ்க்கை வரலாறும் பிரதானமானவை.1851-ல் திரிசிரபுரத்திலிருந்தவர்கள் விரும்பிய வண்ணம் சைவ எல்லப்ப நாவலர் இயற்றிய 'செவ்வந்திப்புராணம்' என்னும் நூலைப் பதிப்பித்தார். இதன்மூலம் பதிப்பாசிரியருக்கும் இலக்கணமானார்.மயிலாடுதுறை வாசம்:பிறகு தமிழார்வம், ஆசிரியத் தொழில் நிமித்தமாக, 1860 முதல் மாயூரம் எனப்படும் மயிலாடுதுறையில் வசிக்கத் தொடங்கி, அங்கிருந்து அடிக்கடி திருவாவடுதுறை மடத்துக்குச் சென்று வந்தார் மீனாட்சிசுந்தரம் பிள்ளை.இவரது அறிவுத் திறனை அறிந்த திருவாவடுதிறை ஆதீனத்தால் அங்கு வித்துவானாக நியமிக்கப்பட்டார். ஆதீனகர்த்தர் அம்பலவாண தேசிகர் மீது கலம்பகம் பாடினார். ஆதீனகர்த்தர் மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்கு 'மகாவித்துவான்' என்ற பட்டத்தை வழங்கி மகிழ்ந்தார். அன்றுமுதல் 'மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை' என்று அழைக்கப்பட்டார்.1871-ல் உ.வே.சாமிநாதையர் மகாவித்துவானின் மாணாக்கரானார். அவர் இறுதிவரை தம் ஆசானோடிருந்து பல்வேறு நூல்களைப் பாடங்கேட்டார். அதன் விளைவாகவே தமிழ்ப் பற்றும் நூல்கள் மீதான நேசமும் பெற்றவரானார் உ.வே.சா. தமிழின் முதல் புதினமான 'பிரதாப முதலியார் சரித்திரம்' எழுதிய வேதநாயகம் பிள்ளையும் பிள்ளையவர்களின் அறிவமுதைப் பெற்றவரே.மகாவித்துவான் பிள்ளையவர்கள், பட்டீஸ்வரம், திருப்பெருந்துறை, குன்றக்குடி முதலிய தலங்களுக்குச் செல்வது வழக்கம். இது அவரது பக்திக்கு உதாரணமாக இருந்தது. செல்லுமிடம் எல்லாம்

தலபுராணம், பதிகம் பாடுதல் அன்னாரது இயல்பு. எனவே பல தலங்க்கள் இவரால் பாடல் பெற்றன.பிள்ளையவர்கள் 1876-ல் நோய்வாய்ப்பட்டார். மாணாக்கர் புதுச்சேரி சவேரிநாத பிள்ளை மார்பில் சாய்ந்த வண்ணம், திருவாசத்தின் அடைக்கலப்பத்தை உ.வே.சா பாட, தை மாதம் 20-ஆம் நாள், செவ்வாய்க்கிழமை, 01.02.1876-ல் தம் 61-ஆம் வயதில் சிவன் சேவடி சேர்ந்தார்.எழுத்தில் அடக்க இயலாச் சிறப்பு:பத்தொன்பதாம் நூற்றாண்டின் கம்பன், இணையிலாப் புலவன், புலவர்களின் புலவன், மெய்ஞானக் கடல், நாற்கவிக்கிறை, சிரமலைவாழ் சைவசிகாமணி முதலிய முப்பதுக்கு மேற்பட்ட பட்டங்களையும் விருதுகளையும் பெற்றவர் பிள்ளையவர்கள்.இவர் வாழ்ந்த காலத்தில் செல்வம் பெறவில்லையே தவிர, செல்வாக்கு குறைந்ததில்லை. தமிழுக்கு இவரால் மரியாதையும் அபிமானமும் பெருகியது. அவர் செல்வம் நாடாதவராக இருந்ததே, அவரது குடும்பத்தின் வறிய நிலைக்குக் காரணம் ஆனது. ஆனால், அதை பிள்ளையவர்கள் ஒருபோதும் பொருட்படுத்தியதில்லை. தனது குடும்பம் வறுமையில் உழன்றபோதும் நாடி வந்த மாணாக்கர்களுக்கு உறைவிடத்துடன் உணவும் அளித்து தமிழ் போதித்த பெருந்தகை அவர்.அவரை நாடி செல்வம் சேர்க்கும் பல வாய்ப்புகள் வந்தன. அவர் நினைத்திருந்தால், சம்மதித்திருந்தால், அவர் காலடியில் பொன்னைக் கொட்ட பலர் தயாராகவே இருந்தனர். ஆனால், பொன்னுக்கு அவர் மயங்கவில்லை. அவர் மனம் (மனம் என்றே கூற வேண்டும், மனது என்று கூறக் கூடாது எனபது பிள்ளையவர்களின் விளக்கம்) முழுவதும் தமிழ் வளர்ச்சியிலும், சைவ நாட்டத்திலும் தான் ஆழ்ந்திருந்தது.தனது குறுகிய வாழ்நாளில், இவர் இயற்றிய நூல்களின் எண்ணிக்கை மலைக்க வைக்கும் அதன் பட்டியல்:

தலபுராணங்கள் 22
சரித்திரம்- 3
மான்மியம்- 1
காப்பியங்கள்- 2
பதிகம்- 4
பதிற்றுப்பத்தந்தாதி- 6
யமக அந்தாதி- 3
மாலை- 7
பிள்ளைத்தமிழ்- 10
கலம்பகம்- 2
கோவை- 3
உலா- 1
தூது- 2
குறவஞ்சி- 1

பிறநூல்கள்- 7
என இவர் செய்துள்ள மொத்த நூல்கள் ஏறத்தாழ 80.பிள்ளையவர்கள் பாடிய பல பாடல்கள் பதிப்பிக்காமல் மறைந்து போயின. ஆயினும் அவர்தம் முதன்மைச் சீடரான தமிழ்த் தாத்தா உ.வே.சா. பிள்ளையவர்களின் 5,021 பாடல்களைப் பாதுகாத்து வழங்கி உள்ளார்.




https://tamil.wiki/wiki/%E0%AE%AE%E0%AF%80%E0%AE%A9%E0%AE%BE%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%9A%E0%AF%81%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%B0%E0%AE%AE%E0%AF%8D_%E0%AE%AA%E0%AE%BF%E0%AE%B3%E0%AF%8D%E0%AE%B3%E0%AF%88

மகாவித்வான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை. (ஏப்ரல் 6, 1815 - பிப்ரவரி 1, 1876) (திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு) தமிழறிஞர், பழந்தமிழ் இலக்கியங்களைப் பயிற்றுவித்தவர், உ. வே. சாமிநாதையரின் ஆசிரியர். திருவாவடுதுறை ஆதீன வித்வானாக பணியாற்றியவர். திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் அம்பலவாண தேசிகர் இவருக்கு 'மகாவித்வான்' என்ற பட்டத்தை அளித்துச் சிறப்பித்தார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் உருவான தமிழ் மறுமலர்ச்சி இயக்கத்திற்கு இரண்டு வகையில் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பங்களிப்பாற்றினார். அன்று தமிழில் சைவ ஆலயங்களை புதுப்பிப்பது, அவற்றுக்கு தலபுராணங்கள் எழுதுவது ஆகிய செயல்கள் தீவிரமாக நிகழ்ந்தன. அவ்வியக்கத்தின் முதன்மையான ஆசிரியராகத் திகழ்ந்தவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை . அவர் நூற்றுக்கும் மேலான தலபுராண நூல்களை இயற்றினார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் மரபார்ந்த முறையில் தமிழ் கற்றவர்கள் பலர் நவீனக் கல்விமுறைக்குள் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் ஆசிரியர்களாக வந்தனர். அவர்களில் பலர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மாணவர்கள். சைவ ஆதீனம் சார்ந்து தமிழ் கற்பித்தமையாலும், இலக்கியம் இலக்கணம் இரண்டையும் முறையாகப் பயிற்றுவித்தமையாலும் அவருடைய மாணவர்களுக்கு நவீனக் கல்விமுறைக்குள் நுழைவதற்கான பயிற்சியும் தகுதியும் அமைந்தன. இவ்விரு வகையிலும் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் தமிழியக்க முன்னோடியாக நினைவுகூரப்படுகிறார்.

வாழ்க்கையும் கல்வியும்



மீனாட்சிசுந்தரம் பிள்ளை வரலாறு. உ,வே.சாமிநாதய்யர்

மீனாட்சிசுந்தரம்பிள்ளை திருச்சி அருகே உள்ள எண்ணெயூரில் 1815-ல் பங்குனி மாதம் துவாதசியன்று மகர லக்கினத்தில் வியாழக்கிழமையில் பிறந்தார். இவரின் பெற்றோர் சிதம்பரம் பிள்ளை -அன்னத்தாச்சி. தமிழ்ப் புலவரான தனது தந்தையிடமே தமிழ் கற்றார். சென்னை சென்று காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியார், அம்பலவாண தேசிகர் உள்ளிட்ட தமிழ் அறிஞர்களிடம் மரபான குருகுல முறைப்படி தமிழ்க்கல்வி பயின்றார்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் காலகட்டத்தில் சங்க இலக்கியங்கள், தமிழ்க்காப்பியங்கள் போன்றவை அறிஞர்களாலும் அறியப்படாமல் சுவடிகளில் மறைந்திருந்தன. திருக்குறள் போன்ற அறநூல்களும் புறச்சமய நூல்களாகக் கருதப்பட்டு புறக்கணிக்கப்பட்டிருந்தன. மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களின் காலகட்டத்திற்குப்பிறகு உருவான தமிழியக்கத்தால்தான் அவை சுவடிகளில் இருந்து அச்சுவடிவம்

கொண்டன. அவை அனைத்து அறிஞர்களாலும் பயிலப்பட்டன. மதச்சார்பற்ற இலக்கியக் கல்வியும் அப்போதுதான் தொடங்கியது.

ஆகவே மீனாட்சிசுந்தரம் பிள்ளை அக்காலத்தைய சைவத்தமிழ்க் கல்வியையே அடைந்தார். அது ஆசாரக்கோவை முதலிய ஒழுக்க நூல்களையும், நன்னூல், தண்டியலங்காரம் முதலிய இலக்கண நூல்களையும், கலம்பகங்கள் புராணங்கள் போன்ற சிற்றிலக்கியங்களையும், சைவத்திருமுறைகளையும் உள்ளடக்கியதாக இருந்தது. மீனாட்சிசுந்தரம்பிள்ளை மாணவர்களுக்குக் கற்பித்ததும் இந்நூல்களையே.

இலக்கியப் பணிகள்

மீனாட்சிசுந்தரம் பிள்ளை தமிழிலக்கிய வரலாற்றில் சிற்றிலக்கியங்களின் காலகட்டத்தின் இறுதியில் வாழ்ந்தவர். தமிழிலக்கிய மரபை அக்காலகட்டத்தில் மேலோங்கியிருந்த இலக்கியப் படைப்புகளின் இயல்புகளைக் கொண்டு சங்க இலக்கிய காலகட்டம் ,காப்பிய காலகட்டம், அறநூல் காலகட்டம், பக்தி இலக்கியக் காலகட்டம், புராணகாலகட்டம், சிற்றிலக்கியக் காலகட்டம், நவீன இலக்கியக் காலகட்டம் என்று பொதுவாகப் பிரிப்பதுண்டு. சிற்றிலக்கியக் காலகட்டத்தில் திட்டவட்டமான வடிவ இலக்கணம் கொண்ட கலம்பகம், பிள்ளைத்தமிழ் போன்ற சிற்றிலக்கியங்கள் மிகுதியாக வெளிவந்தன. அதற்கு முந்தைய புராணகாலகட்டத்தின் தொடர்ச்சியாக புராணங்களும் இயற்றப்பட்டன. அன்று உரைநடை இலக்கியம் உருவாகவில்லை. நூல்களுக்கான விளக்கக்குறிப்புகள் மட்டுமே உரைநடையில் எழுதப்பட்டன.

மீனாட்சிசுந்தரம் பிள்ளை சிற்றிலக்கியம், புராணம் என்னும் இரண்டு வகைமையில் மட்டுமே எழுதியிருக்கிறார். பிள்ளைதமிழ் வடிவில் பல நூல்களை இயற்றியமையால் 'பிள்ளைதமிழுக்கோர் பிள்ளை' என இவரை புகழ்ந்திருக்கிறார்கள். அவருடைய காலகட்டத்தில் சைவசமயம்

புத்துயிர் கொண்டது. ஏராளமான சைவ ஆலயங்கள் பழுதுபார்க்கப்பட்டு குடமுழுக்காட்டு செய்யப்பட்டன. அந்த ஆலயங்களுக்கு தலபுராணங்கள் புதிதாக எழுதப்பட்டன. மீனாட்சிசுந்தரம் பிள்ளை ஊதியம் பெற்றுக்கொண்டு அந்த ஆலயங்கள் அமைந்த ஊர்களுக்குச் சென்று தங்கியிருந்து தலபுராணங்கள் எழுதியளிப்பதை தொழிலாகச் செய்துவந்தார் என அவருடைய மாணவர் உ.வே.சாமிநாதையர் அவரைப்பற்றி எழுதிய வரலாற்றில் சொல்லப்பட்டுள்ளது.

சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பாடல்களை இவர் இயற்றியதாக உ.வே.சாமிநாதையர் குறிப்பிடுகிறார். இவரது படைப்புகள் 42-ஐ ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளை பிரபந்தத் திரட்டு என்னும் பெயரால் இரு தொகுதிகளாக உ.வே.சாமிநாதய்யர் வெளியிட்டுள்ளார். இதுவரை 73 நூல்கள் வெளியாகியிருக்கின்றன. புராணங்கள் 22, சிறு காப்பியங்கள் 6, பிரபந்தங்கள் 45.

இசைப் பணி

மீனாட்சிசுந்தரம் பிள்ளை கர்னாடக இசைப் பாடல்களும் எழுதியிருக்கிறார். அரிசிலாற்றங்கரையில் அமைந்த திரு அம்பர் என்ற தலத்துக்கு விரிவான தலபுராணம் எழுதியதோடு, அங்குள்ள அம்பிகை வம்புவனப் பூங்குழல் நாயகி மீது கர்னாடக இசைக் கீர்த்தனமும் இயற்றியிருக்கிறார்.

பல்லவி:
வம்புவனப் பூங்குழலிநின் அருளே - இந்த
மாநிலத்தும் மேனிலத்தும் மாறாத பொருளே (வம்புவன)
அனுபல்லவி:
அம்பரம ரெம்பரமர் ஐந்தொழில் புரிந்துகிளர்
நம்பரமர் பெருந்துணை எனும்படி கிளர்ந்துவளர் (வம்புவன)

ஆனந்தக்களிப்பு என்பது ஒரு வகையான நாடோடிப்பண் கொண்ட இசைவகைமை. இவ்வடிவம் சித்தர் பாடலிலும் தாயுமானவர் பாடலிலும் புகழ்பெற்றது. மீனாட்சிசுந்தரம் பிள்ளை இந்த இசைப்பாடல் வடிவத்தில் திருஞானசம்பந்தர்

வாழ்க்கை நிகழ்சிகளை 38 கண்ணிகளில் இயற்றியிருக்கிறார். இதன் பல்லவி அல்லது தொடக்கமாக அமைந்த பாடல்:

ஆனந்தம் ஆனந்தம் தோழி - திரு
வாளர்சம் பந்தர் அருள் விளையாடல்
ஆனந்தம் ஆனந்தம் தோழி

பார்புகழ் காழி நகரில் - சிவ
பாத இருதயர் செய்த தவத்தால்

சீர்புகழ் மிக்க மகவா - ஐயர்

திருவரு ளால்அவதாரம் செய்தாரால் (ஆனந்தம்)

கல்விப் பணி

மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் காலகட்டத்தில் ஆங்கிலேயரால் இந்தியாவுக்கு நவீனக்கல்வி முறை அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. பள்ளிகளும் கல்லூரிகளும் உருவாகியிருந்தன. ஆனால் தமிழ்க்கல்வி பெரும்பாலும் மரபான குருகுல முறைப்படித்தான் கற்பிக்கப்பட்டது. மாணவர்கள் ஆசிரியரின் இல்லத்திலேயே தங்கி, அவருக்கு பணிவிடை செய்து கற்றுக்கொள்ளும் முறை அது. ஆசிரியருக்கு மாணவர்கள் முடிந்தால் குருதட்சிணை எனப்படும் காணிக்கை அளிக்கலாம். அரசர்களும், செல்வந்தர்களும், மடாதிபதிகளும் ஆசிரியர்களுக்குரிய நிதியுதவியை அளிப்பார்கள். மீனாட்சி சுந்தரம்பிள்ளைக்கு திருவாவடுதுறை ஆதீனம் நிதியுதவி அளித்தது. மாணவ்ர்கள் அவர் இல்லத்தில் தங்கி கல்வி கற்றனர். இச்சித்திரத்தை உ.வே.சாமிநாதய்யர் அவருடைய 'என் சரித்திரம்' என்னும் நூலிலும் ' திரிசிபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் என்னும் நூலிலும் எழுதியிருக்கிறார். மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மாணவர்கள் இரண்டு வகையானவர்கள். இவருக்கு இணையான நிலையில் இருந்து இவரிடம் தமிழ் பயின்றவர்கள் ஒரு சாரார். அவரிடம் குருகுல முறைப்படி கல்வி பயின்றவர்கள் இன்னொரு சாரார். மாயூரம் வேதநாயகம் பிள்ளை, வல்லூர் தேவராசபிள்ளை, மழவை மகாலிங்கையர், பூவாளூர் தியாகராசச் செட்டியார், இராமநாதபுரம் அழகிரி ராஜுப்பிள்ளை, ஆகியோர் முதல்

வகையில் புகழ்பெற்றவர்கள். உ.வே.சாமிநாத ஐயர், சோடசாவதானம் தி.க. சுப்பராய செட்டியார், குலாம் காதர் நாவலர், சவுரிராயலு நாயக்கர், திருநெல்வேலி ஆரியங்காவுப் பிள்ளை ஆகியோர் இரண்டாம் வகையினர். திருவாவடுதுறை ஆதீனம் சுப்ரமணிய தேசிகர் "அவர்கள் பெயரோடு நமது மடத்தின் பெயரும் விளங்குகிறது. அந்தப் புலவர்மணியின் ஆற்றல் இந்த மடத்தை எல்லோருக்கும் உரிய கல்விநிலையமாகச் செய்தது. வைதிக மதஸ்தர்களும் பிற மதஸ்தர்களும் பல்வகைச் சாதியினரும் தமிழ் நூல்களை தடையின்றிப் பாடம் சொல்லும் அவர்களை எண்ணி இங்கே வந்தனர். நமது மடத்துக்கும் கௌரவத்தை அளித்தனர்." என்று சொல்லியிருப்பது இவர் மதம், சாதி ஆகிய பாகுபாடுகள் இல்லாமல் தமிழ் கற்பித்தார் என்பதற்கான சான்றாகத் திகழ்கிறது.

இலக்கியப் பதிவு

திரிசிபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் என்ற பெயரில் இவரது வாழ்க்கை வரலாற்றை உ.வே.சாமிநாதய்யர் எழுதினார். உ.வே.சாமிநாதய்யரின் 'என் சரித்திரம்' நூலிலும் இவரைப்பற்றிய செய்திகள் உள்ளன

இலக்கியத்திறன்

மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் காலகட்டத்தில் தமிழ் உரைநடை இலக்கியம் உருவாகிக்கொண்டிருந்தது என்றாலும் அவர் மரபார்ந்த செய்யுள்நடையிலேயே எழுதினார். பழைய தமிழ்ச்சொற்களையும் வழக்கமான அணிகளையுமே பயன்படுத்தினார். புதுமைக் கூறுகள் அவற்றில் இல்லை. புதிய அணிகளோ சொல்லாட்சிகளோ அரிது. நவீனத் தமிழிலக்கியம் என்பது மக்கள் நேரடியாகப் படிப்பதற்குரியது. மரபிலக்கியம் தமிழறிஞர்களுக்கும் மாணவர்களுக்கும் உரியது. மீனாட்சிசுந்தரம் பிள்ளை எழுதிய நூல்கள் தமிழறிஞர் வட்டத்திற்கு மட்டும் உரியவை. மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் செய்யுள்நடை சமஸ்கிருதச் சொற்கள் மேவியது. 'அரன் அடியார் கை கொடுக்கப் பட்டதன் பலம் ஒன்று அனந்தமாவது போல பல்பல கிளைத்து எழும்பொழுதே அட்டமெய்யுடையான் ஆலயத்து இடை ஆல் அரசு என முளைத்த பல் களையே' என்னும் வரி ஓர் உதாரணம்.

காம தகன நினைத் தொழுதேன்
காலகால நினைத் தொழுதேன்
சோமசூட நினைத்தொழுதேன்
துணைவி விடாது வீற்றிருக்கும்
வாம பாக நினைத் தொழுதேன்

மதுரக வனத்தாய் நினைத்தொழுதேன்

ஓம உருவ நினைத்தொழுதேன்..

என்பது போன்ற எளிய பாடல்களும் இவர் நூல்களில் உள்ளன. அந்தாதி, கலம்பகம், பிள்ளைத்தமிழ் போன்றவை அவருக்கு உகந்த நூல்வடிவங்கள். பெரும்பாலும் ஆசிரியப்பாவிலேயே எழுதியிருக்கிறார். ஆகவே அவரை கம்பனோடு அக்கால அறிஞர்கள் சிலர் ஒப்பிடுவதுண்டு. மழவை மகாலிங்கையர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பற்றி

தருமைவளர் குமரகுரு முனிவன் கல்வி சார்
பகழிக்கூத்தன் என தரணியோர் சொல்ல
இருவருமே நன்கு பிள்ளைத் தமிழைச் செய்ததற்கு
ஏற்றவர் என்றிடும் உரை வென்றதம்மா
அருமைபெறு காவை அகிலாண்டவல்லி அம்மை
மேன்மேல் படிப்பு நற்றமிழை ஆய்ந்த
சுருதி நெறி தவறாத குணன் மீனாட்சி சுந்தரமால்
அன்பினொடு சொல்லும்போதே

என்ற பாடலில் மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் பிள்ளைத்தமிழ் பாடும் திறன் குமரகுருபரருக்கும் கல்வித்திறன் பகழிக்கூத்தனுக்கும் நிகரானது என்று கூறுகிறார்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளை சைவராயினும் வைணவ தெய்வங்களையும் பாடியிருக்கிறார்.

"எண்ணிய குடும்பலிங்க நாயகரை
இலங்கும் ஆராவமுதரை சீர்
நண்ணிய சைவர் யாவரும் கண்டு
நாடொறும் தந்தை தாய் என்றே
கண்ணிய சிறப்பில் போற்றிடுவாரேல்
கருது பல்போகமும் துய்த்துப்
புண்ணிய மிகுந்த பெரும் சிவலோகம்
புக்கு வாழ்ந்து அமர்வது சரதம்

என்று பாடியிருக்கிறார்.

மறைவு

மீனாட்சிசுந்தரம் பிள்ளை பிப்ரவரி 1, 1876 அன்று தமது 61-ஆவது வயதில் மறைந்தார்.

தமிழ் வளர்த்த சான்றோர்கள்
மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை

கோ.புஷ்பவள்ளி

https://keetru.com/index.php/2014-03-08-04-35-27/2014-03-08-12-18-14/42253-2021-06-30-05-39-24

முன்னுரை

திங்களொடும் செழும்பரிதி தன்னோடும்
விண்ணோடும் உடுக்களோடும்
பெருங்கடல் இவற்றோடு பிறந்த தமிழ் 1

என்கிறார் பாவேந்தர் பாரதிதாசன். தமிழ் மொழி இல்லாத காலம் இத்தரணியில் இல்லை எனச் சான்றோர்கள் கூறுகின்றனர். அத்தகைய மொழி, மொழிகளுக் கெள்ளாம் செம்மொழியாய் விளங்குகிறது. 19 நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய பல அறிஞர்கள் தமிழுக்கு தொண்டாற்றினர்.

இவர்களின் வருகையால் பிறமொழி ஆதிகத்திலிருந்த தமிழ்மொழி மீட்டெடுத்து தமிழர்களைப் பெருமையுரச் செய்தனர். நூற்களைத் தொகுத்தும் இலக்கியத்தையும், இலக்கணத்தைக் கற்றுணர்ந்து அவற்றை ஆய்வுச் செய்வதேயே கடமையாகக் கொண்டனர் எனலாம். இத்தகைய தமிழறிஞர்கள் 'மீனாட்சி சுந்தரம் பிள்ளைப் பற்றி விரிவாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஆய்வு கருதுகோள்

தமிழறிஞரான மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் தமிழ் பணியை சமகாலத் தமிழருக்கு அறிமுகம் செய்வதே இவ்வாய்வின் கருதுகோளாகும்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை

தனிமனிதன் ஒரு பல்கலைக்கழகமாகத் திகழ முடியும் என்பதை 19 நூற்றாண்டில் நிறுவிக்காட்டினார் அறிஞர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை. இவரை 'பிற்காலக் கம்பர்' என திறனாய்வாளர்கள் கூறுகின்றனர்.

படித்தல், பாடம் சொல்லுதல், நூல்களை யாத்தல் என்பதையே வாழ்க்கையாகக் கொண்டு பல தலப் புராணங்களைப் பாடியுள்ளார். சைவ அன்பர்கள் இவரை தம் ஊருக்கு கூட்டிச் சென்று பெருஞ்சிறப்பு செய்து தம் ஊருக்குத் தலப்புராணம் ஆக்கித்தருமாறு வேண்டிப் பெற்றனர். தமிழில் இவரே அதிக தலப்புராணங்களையும், சிற்றிலக்கியங்களையும் பாடியுள்ளார்.

பெருமித வாழ்வு

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாண்டிய நாட்டில் வாழ்ந்த மரபுவழிப் புலவர் சிதம்பரம்பிள்ளை என்பவருக்கு மகனாக சோழநாட்டு காவிரித் தென்கரையில் சிற்றூர் எண்ணுயூரில் பிறந்தார். கி.பி.1815-ல் பிறந்த இவர் தம் தந்தையிடமே தமிழ் மொழிக்கற்றுச் சிறந்தார்.

இளவயதில் காவேரி என்ற பெண்ணை மணந்து திருச்சிராப்பள்ளியில் குடியேறினார். சென்னை சென்று காஞ்சிபுரம் சபாபதி முதலியாரிடம் பாடம் கேட்டு புலமைப் பெற்றார். தன்னை நாடிவந்த தமிழ் ஆர்வலருக்கு தமிழ் கற்பித்தார். திருவாடுவதுறை சென்று 15ஆவது குருமகா சந்நிதனமாக விளங்கிய அம்பலவான தேசிகரிடம் ஞான நூல்களை கற்றறிந்தார். இவருக்கு 'மகாவித்துவான்' எனப் பட்டம் சூட்டினர்.

கல்விப் பணி

மயிலாடுதுறையில் பலகாலம் தங்கியிருந்து இவரது புலமையை அறிந்து நாடி வந்த மாணவர்களுக்கு தமிழை கற்பித்தார். ஏழை மாணவர்களுக்கு உன்ன உணவும், இடமும் அளித்து குருகுலமுறையில் கல்வி புகட்டினார். "தாயை விட தன் மீது அன்பு கொண்டிருந்தவர் எம் ஆசான்"2 என்று உ.வே.சா கூறுகிறார்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை நூல்களைத் தொடுத்து 'ஶ்ரீ மகாவித்துவான் மீனாட்சி திரட்டு, இரு தொகுதியாக திரிபுரமகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம் என்ற இரு வாரலாற்று நூல்களை எழுதியுள்ளார்.

இலக்கிய பணி

தமிழ் இலக்கிய வரலாற்றில் சிற்றிலக்கிய காலத்தில் வாழ்ந்த இவர் திருத்தலங்களை விவரித்து அதிகமான தலபுராணம் பாடியுள்ளார். அதிக நூல்கள் இயற்றிய தமிழறிஞர் என்ற் பெருமையுண்டு.

புராணம் பாடும் புலவர்

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் படைப்புகளை பலவகையில் வகைப்படுத்தலாம். அதில் மிகுதியானவை தலப்புராணங்களே அம்பரம் புராணம் தொடங்கி வீரவனப்புராணம் முடிய 22 புராணங்களைப் படைத்து 'புராணம் பாடும் புலவர்' எனப் பெயர் பெற்றார்.

இத்தகைய புராணத்தில் திருநாகைச் காரோணப்புராணம், மாயூரப்புராணமும் பெருங்காப்பியமாக எண்ணத்தக்கவை. மயிலாடுதுறையில் அமைந்த சோழநாட்டு பெருமையை 'பூவினுள் பதுமம் போலும் புருடன்.....நாட்டினுள் சோழநாடு'3 என விளக்கியுள்ளார்.

அந்தாதி

மகாவித்துவான் பாடிய படைப்புகளில் இரண்டாம் இடத்தில் இருப்பது அந்தாதியாகும். இதில் நான்கு வகையாந்ததி பாடியுள்ளார். பதிற்றுபத்துயந்தாதி (4) திரிபந்தாதி (4) யமகவந்தாதி (4) வெண்பா அந்தாதி (1) என 15 அந்தாதி (1) என 15 அந்தாதியைப் பாடியுள்ளார்.

தனது 26 வயதில் திருவானைக்காத்திரியந்தாதி பாடினார். திரிசிராமலை குறித்த அந்தாதியை விநாயக்கடவுள் தொடங்கி சேக்கிழார் வரை பதினொருவரை வாழ்த்தி அவையடக்கம் ஒருவருக்கு என பன்னிரு செய்யுட்களை புதுவமையான முறையில் படைத்திருக்கிறார்.

பிள்ளைத்தமிழ்

புராணத்திற்கும் அந்தாதிக்கும் அடுத்தாக பிள்ளைத்தமிழ் பாடிய மகாவித்துவான் அகிலாண்ட நாயகி தொடங்கி 10 பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார். இதனால் 'பிள்ளைத்தமிழ் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை' எனப் பெருமைப் பெற்றார். திரியந்தாதிகளில் தளிர்த்து, திரிசிரபுரயமகவந்தாதியில் அரும்பி அகிலாண்ட பிள்ளைத்தமிழில் மலர்ந்து எனக் கூறிப்பிடுகிறனர

கோவை

'பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக'4 என்னும் தொடர் மாணிக்கவாசகர் வாழ்வில் நடந்தது. மகாவித்துவான் படைப்பில் சிறப்பு பெருவது கோவையாகும். அவை சீர்காழ்க் கோவை சபாபதி முதலியார் மீது பாடப்பெற்றது வியாவைக் கோவையும் மாயூரம் வேதநாயகம் மீது இயற்றப்பட்டது குளத்தூர் கோவையாகும்.

வேதநாயகத்தின் வேண்டுக்கோளுக்கு இனங்க சீர்காழியில் உள்ள பிரமபுரீகவரல் மீது சீர்காழி கோவையை பாடினார். இதில் கிடைத்த தொகையை தன் மாணவன் ஒருவனுக்கு திருமணம் செய்து வைத்து வீடு கட்டி கொடுத்துள்ள செய்திகள் வியக்கதக்க செய்தியாகும்.

பிற சிற்றிலக்கியங்கள்

மகாவித்துவான் கலம்பகம், உலா, குறவஞ்சி, சிலேடை,வெண்பா உள்ளிட்ட பல சிற்றிலக்கியங்களையும் படைத்துள்ளார்.

கலம்பகம் - வாட்போக்கிக்கலம்பகம்
அம்பலவாண தேசிகர் கலம்பகம்

உலா - திருவிடைமருதூர் உலா

தூது - சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சுவிடுதூது
தானப்பா ஆசாரியார் தசவிடுதூது

குறவஞ்சி - திருவிடைக்கழிகுறவஞ்சி

சிலேடை வெண்பா - திருவாடுதுறை சிலேடை வெண்பா

இதை தவிர பதிகம், அகவல், சரித்திரம், தனிப்பாடல்கள், விருத்தம், கதை, ஆனந்த களிப்பு போன்ற பலவற்றைப் படைத்துள்ளார். இதுவரை 73 படைப்புகள்

இடம்பெற்றுகின்றன. இவற்றுள் பதிப்பித்து கிடைப்பவை, கிடைக்காதவை என மகாவித்துவான் படைப்புகள் உள்ளன.

விரைந்து செய்யுளியற்றும் வள்ளார்

மகாவித்துவானின் மாணவன் கோபாலப்பிள்ளை விரைந்து எழுதுவதில் வள்ளவர். ஒருநாள் தன் ஆசான் காதில் விழும்படி என் கை வலிக்குமாறு எழுத சொல்வது இல்லையே என செருக்குற்றிருந்தார். ஒருநாள் மீனாட்சி சுந்தரம் பிள்ளை காரோணப் புராணத்தில் சுந்தரலிங்கப்படலத்தில் கற்பனை நிறைந்த பாடல்களை காலைத் ஏழு மணி தொடங்கி நண்பகல் பன்னிரெண்டு மணிவரை எழுதிக் கொண்டே இருந்தார்.

திடீரென எழுந்து எழுத்தாணியை உறையில் வைத்து அவர் காலடியில் விழுந்தார். தன்னால் தங்கள் வேகத்திற்கு எழுத முடியவில்லை தன் கை முன்விரல், கட்டைவிரல் குருதி கசிவதாக தன் தோல்வியை ஒப்புக்கொண்டார்.

பரந்துபட்ட அறிவு

பொருள் சொல்வதில் வல்லவரான மகாவித்துவானிடம் தன்னை விட பெரியவர்கள் யாரும் இருக்கக்கூடாது என தற்பெருமை கொண்ட ஒருவர் அவர் அறியாத ஒன்றைச் சொல்லி

***"காணியுங் காணியுங்
காணியுங்காற்
காணியுங் காணியுங்
காணிமுங்காற்
.....காட்டுங்கழுகுன்றே4"***

உடனே அதில் உள்ள காணிகளை கூட்டி காலைக்காட்டு என்பது பொருள் கழுகுன்றத்தை அடைந்தால் சிவன் திருவடியை அடையளாம் என்பது இதன் கருத்து. பெருந்துறை பித்தனை என் வினை ஒத்த பின் கணக்கில்லாத திருக்கோலம் நீ வந்து காட்டினாய் எனப் பாடப்பெற்று என விடையளித்தார். விடை தொடுத்தவர் நானே இதன் பொருளை அறியவில்லை. இதற்கு பொருள் கூறிய தாங்கள் தெய்வபிறவி என வாழ்த்தினார்.

நகையுணர்வு

மகாவித்துவான் இயல்பாக நகைச்சுவை உணர்வு மிக்கவர். மற்றவரின் செயலில் இருக்கும் தவறினை நயமாக சுட்டிக்காட்டும் பண்பாளர். பிள்ளையவர்களிடம் பாடம் கேட்க ஒருவர் வந்தராம் அவரிடம் என்ன படிக்க வேண்டும் என்றார். இலக்கியம் என்றார்.

இலக்கணம் படிக்க வேண்டாமா? என்றார் நன்றாக படித்து இருக்கிறேன், உடனே பிள்ளை ஒரு பாடலை கூறி இதில் உள்ள எழுவாய், பயனிலை கூறுக எனக் கேட்டார். வந்தவர் ஒன்றும் புரியாமல் வெகு நேரம் நிற்க பிள்ளை இனி எழுந்திருப்பாய் அமர்ந்துயிருப்பதில் பயனில்லை என அருகில் இருப்பவர் குறிப்பால் சொன்னதாக உ.வே.சா கூறுகிறார்.

முடிவுரை

இதுகாறும் கூறியவற்றில் இருந்து முடிவுகள் பின்வருமாறு

¬ இவ்வாய்வின் வழியாக மகாவித்துவான் புலமையும் தமிழ்தொண்டும் புலப்படுகின்றன.

¬ மகாவித்துவானின் நூல்கள் அனைத்தும் அச்சிட்டு மக்களுக்கு கிடைக்கும் வண்ணம் செய்ய வேண்டும்.

¬ இவரின் நூற்களை ஆய்வாளர்கள் ஆய்வு களமான கொண்டு ஆய்வுச் செய்ய வேண்டும்

¬ இவருக்கு இவர் வாழ்ந்த ஊரில் மணிமண்டபம் அமைக்கவேண்டும்

¬ நவீன அறிவியல் உலகில் இக்காலத்தில் இவரின் உண்மையான படத்தினை இணையத்தில் காண்பது அரிது. எனவே திருவுவை இந்திய மக்கள் அறியும் வண்ணம் இணையத்திலும் அஞ்சல் தலையாகவும் வெளியிட வேண்டியது அரசின் கடமையாகும்.

அடிக்குறிப்புகள்

1. டாக்டர்.பூவண்ணன், தமிழ் இலக்கிய வரலாறு திருநெல்வேலி தென்னிந்தய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை 1996. ப.6
2. உ.வே.சாமிநாதையர், திரிபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம் மதுரை, 1998 ப.68
3. மகாவித்துவன் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, மாயூரப்புராணமும், மதுரை

1996, ப.8

4. முனைவர்.குணசேகர் மகாவித்துவான் இலக்கியப்பணிகள், 2015 ப.5

துணை நூற்பட்டியல்

நூல்கள்

1. டாக்டர். பூவண்ணன் - தமிழ் இலக்கிய வரலாறு திருநெல்வேலி தென்னிந்தய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை 1996.

2. உ.வே.சாமிநாதையர் - திரிபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம் மதுரை, 1998 ப.68

3. மகாவித்துவன் மீனாட்சி சுந்தரம்பிள்ளை - மாயூரப்புராணமும், மதுரை 1996,

ஆய்வு கட்டுரை

1. முனைவர்.குணசேகர் மகாவித்துவான் இலக்கியப்பணிகள், 2015

- முனைவர்.கோ.புஷ்பவள்ளி

மீனாட்சிசுந்தரம் பிள்ளை

https://www.hindutamil.in/news/blogs/40115-10.html

ராஜலட்சுமி சிவலிங்கம்

பிற்காலக் கம்பர் என்று போற்றப்பட்டவரும், தமிழ் அறிஞருமான 'மகாவித்வான்' மீனாட்சிசுந்தரம் பிள்ளை (Meenakshi Sundaram Pillai) பிறந்த தினம் இன்று (ஏப்ரல் 6). அவரைப் பற்றிய அரிய முத்துக்கள் பத்து:

λ திருச்சி அருகே உள்ள எண்ணெயூரில் (1815) பிறந் தவர். தமிழ்ப் புலவரான தந்தையிடமே தமிழ் கற்றார். அபார நினைவாற்றல் கொண்ட வர். பாடல்களைப் படித்த வேகத்தில் மனதில் பதிய வைத்துக்கொண்டுவிடுவார். சிறு வயதிலேயே பாடல் புனையும் ஆற்றல் பெற்றிருந்தார்.

λ சென்னை சென்று சபாபதி முதலியார், அம்பலவாண தேசிகர் உள்ளிட்ட தமிழ் அறிஞர்களிடம் கல்வி பயின்று புலமை பெற்றார். காப்பியங்கள், அற நூல்கள், சித்தாந்த சாத்திரங்கள், பேருரைகள், சிற்றிலக்கியங்கள் என அனைத்தையும் கற்றுத் தேர்ந்தார். அமரத்துவம் வாய்ந்த பல இலக்கியங்களைப் படைக்கத் தொடங்கினார்.

λ சிற்றிலக்கியக் காலம் என்று கூறப்பட்ட இவரது காலத்தில் திருத்தலங்களின் வரலாற்றை விவரித்து ஏராளமான தல புராணங்கள் பாடினார். இவரது புலமையை அறிந்து நாடிவந்த பலருக்கும் தமிழ் கற்பித்தார். இவரிடம் பயின்றவர்களில் 'தமிழ்த் தாத்தா' உ.வே.சாமிநாத ஐயர், குலாம் காதர், நாவலர், சவுரிராயலு நாயக்கர் குறிப்பிடத்தக்கவர்கள்.

λ சீர்காழியில் முன்சீப்பாக பணியாற்றிய மாயூரம் வேத நாயகம் பிள்ளையுடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார். அவர் மீது வைத்திருந்த பெருமதிப்பின் காரணமாக, அவரைப் பாராட்டி 'குளத்துக்கோவை' என்னும் நூலை இயற்றினார்.

λ மயிலாடுதுறையில் பலகாலம் தங்கி மாணவர்களுக்குக் கல்வி கற்பித்தார். திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் அம்பலவாண தேசிகர் இவருக்கு 'மகாவித்வான்' என்ற பட்டத்தை அளித்துச் சிறப்பித்தார். சிவபக்தி, அடக்கம், விருந்தோம்பல், உயர்ந்த உள்ளம், கற்றாரைப் போற்றும் தன்மை ஆகிய நற்குணங்களைப் பெற்றிருந்தார்.

λ திருவாவடுதுறை மடத்தின் தலைமைப் புலவராகத் திகழ்ந்தார். தன்னிடம் கல்வி பயில வருபவர்களை சொந்த பிள்ளைகள்போலக் கருதி உணவும், இடமும் அளித்து பாரபட்சமின்றி கல்வி புகட்டினார்.

λ 19-ம் நூற்றாண்டில் தமிழில் அதிக நூல்களை இயற்றி யவர் இவர்தான். புராணங்கள், காப்பியங்கள், பிள்ளைத் தமிழ் நூல்கள், அந்தாதி, கலம்பகங்கள், கோவைகள், எண்ணற்ற தனிப் புராணங்களை இயற்றியுள்ளார். பிள்ளைத்தமிழ் நூல்களைப் பாடியதால் 'பிள்ளைத் தமிழ் மீனாட்சி சுந்தரம் பிள்ளை' என்று புகழப்பட்டார்.

λ பெரியபுராணம் பிரசங்கம் செய்வதில் வல்லவர். இவரது படைப்புகள் அனைத்துமே செய்யுள் வடிவில் அமைந்துள்ளன. சுமார் 2 லட்சம் பாடல்களை இவர் இயற்றியதாகக் கூறப்படுகிறது.

λ 'தாயைவிட என் மீது அதிக அன்பு கொண்டிருந்தவர் என் ஆசான்' என்று உ.வே.சா. இவரைக் குறிப்பிட்டுள்ளார். இவரது படைப்புகள் பலவற்றை ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளை பிரபந்தத் திரட்டு என்னும் பெயரால் உ.வே.சா. வெளியிட்டுள்ளார். மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம் என்ற தலைப்பில் இவரது வாழ்க்கை வரலாற்றை உ.வே.சா. எழுதினார்.

λ தமிழ் மொழிக்கு ஒப்பற்ற தொண்டாற்றிய தமிழ் அறிஞர் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை 61 வயதில் (1876) மறைந்தார்.

மகாவித்துவான்

https://www.youtube.com/hashtag/%E0%AE%AE%E0%AE%95%E0%AE%BE%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%81%E0%AE%B5%E0%AE%BE%E0%AE%A9%E0%AF%8D

100 videos and channels

மண்ணின் குரல்: ஏப்ரல் 2014

மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை

https://groups.google.com/g/mintamil/c/ZdOK6XFDTn0




Suba.T.

வணக்கம்.

தமிழ் மரபு அறக்கட்டளையின் விழியப் பதிவு ஒன்று இன்று வெளியீடு காண்கின்றது.

நமது மின்னூல் வெளியீடுகளில் இதுவரை மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் நூல்கள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன என்பதை மின்தமிழ் வாசகர்கள் அறிவீர்கள்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் திருவாவடுதுறை ஆதீனத்தின் புலவராக இருந்தவர். இங்கு அவர் பல மாணவர்களுக்குத் தமிழ் கற்றுக் கொடுத்தும் அங்கிருந்தபடியும் மற்றும் பல ஊர்களுக்கு பயணித்த படியுமிருந்து பல தல புராண நூல்களை இயற்றினார். அவர் மறைந்ததும் இதே ஆதீனத்தில் அவருக்காக வழங்கப்பட்டிருந்த திருமடத்து புலவர்கள் இல்லத்திலேயே!



மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்

மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் திரு.சிதம்பரம்பிள்ளை அன்னத்தாச்சி அம்மையார் ஆகியோருக்கு 6.4.1815ம் ஆண்டு பிறந்தார். தமது தந்தையார் ஒரு தமிழ் ஆசிரியர் என்பதால் அவர் துணையோடு கல்வி கற்க ஆரம்பித்தார். அவரது தமிழ் ஆர்வம் எல்லையற்றதாக இருந்தமையால் இவர் சான்றோர்கள் இருக்கும் இடம் தேடிச் சென்று அவர்களிடமெல்லாம் கல்வி கற்று வரலானார். திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் மிகுந்த

தமிழ்ப்புலமை கொண்டவர் என்பதை அறிந்து தக்கார் துணை கொண்டு திருமடத்தில் ஆதீனகர்த்தரின் அறிமுகம் பெற்றார். தமக்கு ஆசிரியராக இருந்த ஆதீனகர்த்தர் அம்பலவாண தேசிகருக்காக திருவாவடுதுறை ஸ்ரீ அம்பலவாண தேசிகர் பிள்ளைத் தமிழ், கலம்பகம் ஆகிய இரு நூற்களை பிள்ளையவர்கள் இயற்றினாரர்கள். இவை இரண்டும் தமிழ் மரபு அறக்கட்டளையின் மின்னூல்கள் சேகரத்தில் உள்ளன.

பிள்ளையவர்களின் தமிழ் புலமையைக் கண்டு பாராட்டி ஆதீனகர்த்தர் இவருக்கு மகாவித்துவான் என்ற சிறப்புப் பட்டமளித்துச் சிறப்பித்தார்கள். இவருக்குப் பல மாணவர்கள். அதில் குறிப்பாக, சவேரிநாதப் பிள்ளை, உ.வே.சாமிநாதய்யர், தியாகராச செட்டியார், சுப்பராய செட்டியார் ஆகியோரைக் கூறலாம். சீர்காழியில் நீதிபதியாகப் பதவி வகித்த வேதநாயகம் பிள்ளையவர்கள் இவரது நெருங்கிய நண்பராக இருந்தவர். அம்பலவாண தேசிகர் மறைவுக்குப் பின் ஆதீனகர்த்தராகப் பதவி ஏற்றுக் கொண்ட சுப்பிரமணிய தேசிகர் பிள்ளையவர்களுக்கு ஆதீனத்தில் பல சலுகைகளை உருவாக்கித் தந்து பிள்ளையவர்களோடு அவரது அன்பிற்குரிய மாணாக்கர்கள் அனைவரும் தங்கியிருந்து பாடங் கேட்கவும் உதவியவர். ஆதீனகர்த்தர் என்ற நிலையைக் கடந்து இவர்கள் இருவருக்கும் இடையே மிக நெருக்கமான நட்பும் அமைந்திருந்தது. இவர் 1.2.1876ம் ஆண்டில் இறைவன் திருவடியை அடைந்தார் என்பன போன்ற தகவல்களை உ.வே.சாவின் என் சரிதக் குறிப்புக்களிலிருந்து அறியமுடிகின்றது.

19ம் நூற்றாண்டில் தமிழில் அதிகமான நூற்களை இயற்றிய தமிழறிஞர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களே. புராணங்களும் சிறுவகை நூல்களுமாக ஏறத்தாழ எழுபத்தொன்பதுக்கும் மேற்பட்ட நூல்களை இவர் இயற்றியுள்ளார். அனைத்துமே செய்யுள் வடிவில் அமைந்தவை.

இவர் இயற்றிய நூல்கள் வகைகளின் அடிப்படையில்:

- புராணம்: 9
- கோவை: 3

- பிள்ளைத் தமிழ்: 7
- அந்தாதி: 14
- மாலை: 6
- பதிகம்: 3
- கலம்பகம்: 2
- உலா: 1
- அகவல்: 1
- தூது: 1
- சரித்திரம்: 2
- தனிப்பாடல்கள்: 1
- விருத்தம்: 1
- கதை: 1
- ஆனந்தக் களிப்பு: 1

<u>குறிப்புக்கள்:</u>

திருச்சிராப்பள்ளித் தமிழ் சங்கத்தின் வெளியீடு திரிசிரிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் வரலாறு.



மகாவித்வான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் உருவத்தோற்றத்தை மனதில் வைத்து திருவாவடுதுறை ஆதீனத்தில் உருவாக்கிய புகைப்படம் இது. இப்புகைப்படம் ஆதீனத்தின் சரசுவதி மகாலில் பதியப் பட்டது.

இன்று மகாவித்வான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் பிறந்த தினம். அதனை முன்னிட்டு மகாவித்வான் தங்கியிருந்து தமிழ்த்தொண்டு செய்த திருவாவடுதுறை ஆதீன மடம், புலவர்கள் விடுதி, சரசுவதி மகால் நூலகம். ஓலைச்சுவடி நூல்கள், ஆதீ

னத்தின் சுற்றுவளாகம் ஆகியவற்றை விவரிக்கும் ஒரு சிறிய விழியப் பதிவே இன்று வெளியீடு காண்கின்றது. இப்பதிவு 13 நிமிடங்கள்

2013ம் ஆண்டு மார்ச் மாதம் திருவாவடுதுறை மடத்திற்கு நான் நேரில் சென்றிருந்த போது அங்கு பதிவு செய்யப்பட்ட விழியம் இது.

விழியப் பதிவைக் காண: http://video-thf.blogspot.de/2014/04/blog-post_6.html

யூடியூபில் இப்பதிவைக் காண: https://www.youtube.com/watch?v=NBk7eMt9gOY

அன்புடன்
சுபாஷிணி ட்ரெம்மல்
[தமிழ் மரபு அறக்கட்டளை]

மீனாட்சிசுந்தரம் பிள்ளை

https://www.maalaimalar.com/sirappukatturaigal/maalaimalar-special-articles-773000

திருவாரூர் ஸ்ரீ தியாகராசர் லீலை

ஸ்ரீ மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை

https://archive.org/details/thiyagarajaleelai/mode/2up

https://books.google.co.in/books/about/%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%81%E0%AE%B5%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%82%E0%AE%B0%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%8D_%E0%AE%A4.html?id=PVx6eW0bbKsC&redir_esc=y

விஜயபாரதம்
தேசிய வார இதழ்

https://vijayabharatham.org/%E0%AE%AE%E0%AE%95%E0%AE%BE%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%B5%E0%AE%BE%E0%AE%A9%E0%AF%8D-%E0%AE%AE%E0%AF%80%E0%AE%A9%E0%AE%BE%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9A%E0%AE%BF-%E0%AE%9A%E0%AF%81-2/

'தாயை விட என்மீது அதிக அன்பு கொண்டிருந்தவர் என் ஆசான்' என்று தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாத ஐயரால் புகழப்பட்டவரும், பிற்காலக் கம்பர் என்று போற்றப்பட்டவருமான தமிழ் அறிஞர் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை திருச்சி அருகேயுள்ள எண்ணெயூரில் 1815ல் பிறந்தார். தமிழ்ப் புலவரான தன் தந்தையிடமே தமிழ் கற்றார். அபார நினைவாற்றல் கொண்டிருந்த இவர், பாடல்களைப் படித்த வேகத்தில் மனதில் பதியவைத்துக் கொண்டுவிடுவார். சிறுவயதிலேயே பாடல் புனையும் ஆற்றல் பெற்ற இவர், பின்னாளில் சபாபதி முதலியார், அம்பலவாண தேசிகர் உள்ளிட்ட பல தமிழ் அறிஞர்களிடம் கல்வி பயின்று புலமையை வளர்த்துக் கொண்டார். திருவாவடுதுறை ஆதீனம் அம்பலவாண தேசிகர் திருக்கரங்களால் இவருக்கு 'மகாவித்வான்' என்ற பட்டம் வழங்கப்பட்டது. பிள்ளையவர்கள் காவேரியாச்சி என்ற பெண்ணைத் திருமணம் செய்துகொண்டார். இவர் புதல்வர் சிதம்பரம் பிள்ளை.

மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் 21 வயதில் திரிசிரபுரம் செட்டி பண்டாரத்தையா என்பாரிடம் சிவ தீட்சை பெற்றார். அன்றுமுதல் அவரை வெண்ணீற்று வேந்தராகவே தமிழகம் வாழ்நாள் முழுவதும் கண்டது. பெரியபுராணப் பிரசங்கம் செய்வதில் வல்லவர். இவரது படைப்புகள் அனைத்துமே

செய்யுள் வடிவில் அமைந்துள்ளது. 19ம் நூற்றாண்டில் தமிழில் அதிக நூல்களை இயற்றியவர் இவரே. பிள்ளைத்தமிழ் நூல்களாகப் பாடியதால் 'பிள்ளைத் தமிழ் மீனாட்சி சுந்தரம் பிள்ளை' என்று புகழப்பட்டார். சிற்றிலக்கிய காலத்தில் வாழ்ந்த இவர், ஏராளமான தல புராணங்கள் பாடியுள்ளார். திருவாவடுதுறை மடத்தின் தலைமைப் புலவரான இவரிடம் கல்வி பயில வரும் அனைவரையும் தன் சொந்தப் பிள்ளைகளாகவே பாவித்து உணவும், உறைவிடமும் அளித்துக் கல்வி புகட்டினார்.


உ.வே.சா, குலாம்காதர், நாவலர், சவுரிராயலு நாயக்கர் உள்பட பலர் இவரிடம் பயின்றவர்கள். மாயூரம் வேதநாயகம் பிள்ளையுடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார். அவரைப் பாராட்டி 'குளத்துக்கோவை' என்ற நூலை இயற்றினார். சங்கீதத்தில் பற்றுக்கொண்டிருந்த இளைஞர் உ.வே.சாவைத் தமிழில் ஆர்வம் கொள்ளச் செய்து ஆற்றுப்படுத்தியது பிள்ளையவர்களின் சிகரமான தமிழ்த்தொண்டு ஆயிற்று. 2 தல புராணங்கள், 10 பிள்ளைத்தமிழ், 3 சரித்திரங்கள், 2 காப்பியங்கள், 4 பதிகங்கள், 6 பதிற்றுப்பத்தந்தாதி, 3 யமக அந்தாதி, 7 மாலை, 2 கலம்பகம், 3 கோவை, 1 உலா, 2 தூது, 1 குறவஞ்சி என தனது வாழ்நாளில் இயற்றிய நூல்களின் எண்ணிக்கை 75க்கும் மேல்! இவரது காலடியில் பொன்னைக் கொட்ட பலர் தயாராகவே இருந்தனர். ஆனால், பொன்னுக்கும் பொருளுக்கும் மயங்காத அவரது மனம், என்றும் தமிழ் வளர்ச்சியிலும், சைவ சமயத்திலுமே தோய்ந்திருந்தது.

திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் சரித்திரம் (நூல்)

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%AA%E0%AF%81%E0%AE%B0%E0%AE%AE%E0%AF%8D_%E0%AE%AE%E0%AE%95%E0%AE%BE%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%A4%E0%AF

%8D%E0%AE%A4%E0%AF%81%E0%AE%B5%E0%AE%BE%E0%AE%A9%E0%AF%8D_%E0%AE%AE%E0%AF%80%E0%AE%A9%E0%AE%BE%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%9A%E0%AF%81%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%B0%E0%AE%AE%E0%AF%8D_%E0%AE%AA%E0%AE%BF%E0%AE%B3%E0%AF%8D%E0%AE%B3%E0%AF%88%E0%AE%AF%E0%AE%B5%E0%AE%B0%E0%AF%8D%E0%AE%95%E0%AE%B3%E0%AE%BF%E0%AE%A9%E0%AF%8D_%E0%AE%9A%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%AE%E0%AF%8D_(%E0%AE%A8%E0%AF%82%E0%AE%B2%E0%AF%8D)

திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் சரித்திரம்



நூல் பெயர்:	திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் சரித்திரம்
ஆசிரியர்(கள்):	டாக்டர். உ.வே.சாமிநாதையர்
வகை:	வரலாறு
துறை:	வரலாறு
இடம்:	தஞ்சாவூர் 600 001
மொழி:	தமிழ்

பக்கங்கள்:	356+346 (இரு பாகங்கள்)
பதிப்பகர்:	தமிழ்ப் பல்கலைக்கழகம்
பதிப்பு:	மறு பதிப்பு 1986
ஆக்க அனுமதி:	டாக்டர் உ.வே.சாமிநாதையரவர்கள் நூல் நிலைய ஆட்சிக்குழு

திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் சரித்திரம், டாக்டர். உ.வே.சாமிநாதையர் எழுதிய மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் வரலாறாகும். இந்நூல் 1933-இல் முதல்பதிப்பாக வெளியிடப்பட்டது.

அமைப்பு

இந்நூல் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் முன்னோரும் தந்தையாரும் என்ற தலைப்பில் தொடங்கி புராணங்களும் பிரபந்தங்களும் இயற்றல் என்ற தலைப்பு வரை 24 தலைப்புகளோடு, செய்யுள் முதற்குறிப்பகராதி, சிறப்புப்பெயர் முதலியவற்றின் அகராதி ஆகியவற்றோடு முதல் பாகம் அமைந்துள்ளது. நூலாசிரியரை ஏற்றுக்கொண்டது முதல், இயல்புகளும் புலமைத்திறனும் வரை 12 தலைப்புகளோடு, நான்கு அநுபந்தங்களைக் கொண்டு, செய்யுள் முதற்குறிப்பகராதி, சிறப்புப்பெயர் முதலியவற்றின் அகராதி ஆகியவற்றோடு இரண்டாவது பாகம் அமைந்துள்ளது.

காணொளிகள்

மீனாட்சிசுந்தரம் பிள்ளை

https://www.youtube.com/watch?v=FSrn66kq6ZA [6:59]

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை

https://www.youtube.com/watch?v=i8S0LAVovKw [14:20]

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்

https://www.youtube.com/watch?v=bDuya9363fs [19:53]

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார்

https://www.youtube.com/watch?v=Vk3LUCoo3yU [17:00]

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார்


https://www.youtube.com/watch?v=ULYRfHnAxTw [13:11]

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை

https://www.youtube.com/watch?v=i8S0LAVovKw [14:20]

ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்

டாக்டர். உ. வே. சாமிநாதையர்



இறவாத புகழுடைய புதுநூல் மகாவித்துவான் ஸ்ரீமீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் சரித்திரம் என்றால் மிகையாகாது. ஒரு புலவரது வரலாறு எவ்வாறு அமைய வேண்டுமோ அவ்வாறு அமைவதற்கு இலக்கணமாக அமைந்த வரலாறு ஆகும். இதைப் பிள்ளை அவர்கள் சரித்திரம் என்று சொல்வதைவிட ஒரு நூற்றாண்டு காலத் தமிழ் இலக்கிய வரலாறு என்று கூடச் சொல்லிவிடலாம்.

அவரது தணியாத தமிழ்ப் புலவர் வரலாறு என்னும் தாகத்தைத் தணிக்க வந்த கோடை மழை அவரது ஆசிரியராகிய மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் சரித்திரம் ஆகும். நேரில் பழகிப் பாடங்கேட்டும் பிறர்பால் அறிந்தும் நூல்களை ஆராய்ந்தும் பிள்ளையவர்களைப் பற்றி வரலாற்று முறைப்படித் தொகுத்து எழுதிய இச்சரித்திர நூல் இக்கவிஞர்

பெருமானைப்பற்றிப் பலரும் நன்கு அறிந்து கொள்ளத் தக்கதாக வரலாற்று நூல்களின் தலைமையாக விளங்குகிறது.

கிட்டதட்ட ஒரு நூற்றாண்டு காலம் தமிழகத்தில் தமிழின் நிலை, வாழ்ந்த தமிழ்ப்புலவர் பற்றிய குறிப்புகள், அப்பொழுது தோன்றிய தமிழ் நூல்கள் என்று ஒரு வரலாற்றுக் களஞ்சியமாக இச்சரித்திரத்தை உருவாக்கி உள்ளார்கள்.

ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் அவர்கள் திரு அவதாரம் முதல் அவர்களது மறைவு வரை உள்ள சரித்திரத்தை அவர்கள் எழுதிய நூல்கள், பாடல் சொல்லிய அனுபவங்கள், பழகிய இடங்கள், உடன் பழகிய புலவர் பெருமக்கள், அவர்களைப் போற்றியவர்கள், அவர்களால் போற்றப்பெற்றவர்கள். ஆசிரிய மாணவர் அன்பின் திறம், அக்காலத்திய செந்தமிழ்ப் பண்ணையாக விளங்கிய திருவாவடுதுறை ஆதீனத்தின் தமிழ்ப்பணி என்ற ஒவ்வொன்றையும் ஆசிரியர் சொல்லிச் சொல்லி நம் நெஞ்சில் பதியவைக்கும் அழகு படிப்போர் நெஞ்சில் நீங்காது நிற்கும்.

டாக்டர். உ. வே. சாமிநாதையர்

இந்து தமிழ் திசை

உதாரண ஆசிரியர்

மீனாட்சி சுந்தரம் பிள்ளை

https://www.hindutamil.in/news/literature/208607-.html

தமிழ் இலக்கிய வரலாற்றில் 18,19-ம் நூற்றாண்டுகளில் எண்ணற்ற தமிழ்ச் சான்றோர் தோன்றினர். இந்த நூற்றாண்டுகளைச் சிற்றிலக்கியக் காலம் என்றும் கூறுவர். இந்தக் காலத்தில் திருத்தலங்களின் வரலாறு கூறும் தல புராணங்கள் பெருமளவில் பாடப்பெற்றன. அக்காலகட்டத்தில் தலபுராணங்களைப் பாடிய பெருமை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களையே சாரும்.

பல பெரியோர்களின் பெருமை, அவர்களிடம் கல்வி கற்ற மாணவர் களாலும், மாணவர்களின் பெருமை அவர்களுக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர் களாலும் உலகுக்குத் தெரியவரும். அத்தகைய பெருமை வாய்ந்த மாணவர்களை உருவாக்கிய சிறப்பு மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களுக்கு மட்டுமே வாய்த்தது. வித்துவான் தியாகராசச் செட்டியார், உ.வே. சாமிநாதய்யர் போன்ற தலைசிறந்த மாணவர்கள் அவருக்குக் கிடைத்தனர்.

1815-ம் ஆண்டு திருச்சிராப்பள்ளியில் பிள்ளையவர்கள் பிறந்தார். தன் தந்தையாரைக் குருவாகக் கொண்டு ஆரம்பக் கல்வியைக் கற்கத் துவங்கிய அவர், சான்றோர் முதல் சாதாரணமானவர் வரை என யாரிடமெல்லாம் கற்க வேண்டியன உள்ளனவோ அவர்களிடமெல்லாம் கைப்பொருள் கொடுத்துக் கல்வி பயின்று மகாவித்துவான் ஆனார். சிவபக்தி, வெகுளாமை, விருந்தோம்பும் பண்பு, சாதி, மதம் நோக்காத உயர்ந்த நெஞ்சம், கற்றாரைப் போற்றும் பெருந்திறம், ஆன்மீகக் கற்பனை மிக்க கவிதைகளை விரைந்தியற்றும் பேராற்றல் இத்தகைய பெருமைகளைப் பெற்றிருந்த பேராளர் அவர். தம்மிடம் வாய்த்திருந்த கல்வித் திறனைச் சாதி மதம் பாராது எவ்விதக் கைமாறும் பெற்றுக்கொள்ளாமல் வந்து சேர்ந்த மாணவர்களச் சொந்த மக்களைப் போலக் வாரி வழங்கிய திறம் என அவரது பெருமைகள் பல. அவரது மாணவர் உ.வே.சா., அவரது பெயரை எழுத்தால் எழுதுவதற்கு அஞ்சுவதாகக் குறிப்பிடுவார். மாணாக்கர்களிடம் அத்தகைய குருபக்தியை ஏற்படுத்தியவர் மகாவித்துவான். தம்மை நாடி வந்த அனைத்து மாணவர்களுக்கும் உணவளித்துத் தங்குமிடமும் அளித்துக் கல்வி புகட்டியவர் அவர். அவர் இயற்றிய புராணங்கள் 22. பிற காப்பியங்கள் ஆறு. பிள்ளைத்தமிழ் முதலியன 45. எண்ணிறந்த தனிப்புராணங்களும் இயற்றியுள்ளார்.

நீதிபதி வேதநாயகம் பிள்ளையின் பால் இவர் பெருமதிப்பு கொண்டிருந்தார். அவரைப் பாராட்டிக் குளத்துக்கோவை என்னும் நூல் இயற்றியுள்ளார். தகுதியில்லாத யாரையும் புகழ்ந்து பாடும் பழக்கத்தைக் கொண்டிராத மகாவித்துவான் பாடிய பாடல் அவரது சமயப் பொறைக்கும் சமயம் கடந்த சிறந்த நட்புக்கும் சிறந்த சான்றாகும். பிறருக்குக் கல்வி கற்பிப்பதில் வள்ளலாக வாழ்ந்த அந்தப் பெருந்தகையின் வாழ்வு இன்றைய ஆசிரியப் பெருமக்களுக்கெல்லாம் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவதாகும்.

TELIBRARY.COM

https://telibrary.com/meenakshi-sundaram-pillai/



மீனாட்சிசுந்தரம் பிள்ளை

(ஏப்ரல் 6, 1815 – பிப்ரவரி 1, 1876; திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு)

மீனாட்சிசுந்தரம் பிள்ளை (ஏப்ரல் 6, 1815 – பிப்ரவரி 1, 1876; திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு) சிறந்த தமிழறிஞர். உ. வே. சாமிநாதையரின் ஆசிரியர். திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் அம்பலவாண தேசிகர் இவருக்கு 'மகாவித்வான்' என்ற பட்டத்தை அளித்துச் சிறப்பித்தார். திருவாவடுதுறை மடத்தின் தலைமைப் புலவராகத் திகழ்ந்தார். சீர்காழியில் முன்சீபாகப் பணியாற்றிய தமிழில் முதல் புதினமான பிரதாப முதலியார்

சரித்திரத்தை எழுதிய மாயூரம் வேதநாயகம் பிள்ளையுடன் நெருங்கிய நட்புக் கொண்டிருந்தார். அவர் மீது வைத்திருந்த பெருமதிப்பின் காரணமாக, அவரைப் பாராட்டி 'குளத்துக்கோவை' என்னும் நூலை இயற்றினார்.

வாழ்க்கையும்,கல்வியும்

இவர் திருச்சி அருகே உள்ள எண்ணெயூரில் 1815இல் பிறந்தார். இவரின் பெற்றோர் சிதம்பரம் பிள்ளை -அன்னத்தாச்சி ஆகியோர் ஆவர். தமிழ்ப் புலவரான தனது தந்தையிடமே தமிழ் கற்றார். சென்னை சென்று காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியார், அம்பலவாண தேசிகர் உள்ளிட்ட தமிழ் அறிஞர்களிடம் கல்வி பயின்று புலமைப் பெற்றார். அற நூல்கள், காப்பியங்கள், சித்தாந்த சாத்திரங்கள், பேருரைகள், சிற்றிலக்கியங்கள் என அனைத்தையும் கற்றுத் தேர்ந்தார். இவர் அபார நினைவாற்றல் கொண்டவராகத் திகழ்ந்தார். பாடல்களைப் படித்த வேகத்தில் மனத்தில் பதிய வைத்துக்கொண்டுவிடுவார். சிறு வயதிலேயே பாடல் புனையும் ஆற்றல் பெற்றிருந்தார்.

இலக்கியப் பணிகள்

சிற்றிலக்கியக் காலம் என்று அழைக்கப்படும் காலத்தில் வாழ்ந்த இவர், திருத்தலங்களின் வரலாற்றை விவரித்து ஏராளமான தல புராணங்கள் பாடினார். 19-ம் நூற்றாண்டில் தமிழில் அதிக நூல்களை இயற்றியவர் இவர்தான். புராணங்கள், காப்பியங்கள், பிள்ளைத் தமிழ் நூல்கள், அந்தாதி, கலம்பகங்கள், கோவைகள், எண்ணற்ற தனிப் புராணங்களை இயற்றியுள்ளார். பிள்ளைத்தமிழ் நூல்களை அதிகமாகப் பாடியதால் 'பிள்ளைத் தமிழ் மீனாட்சி சுந்தரம் பிள்ளை' என்று புகழப்பட்டார்.

பெரியபுராணச் சொற்பொழிவு செய்வதில் வல்லவர். இவரது படைப்புகள் அனைத்துமே செய்யுள் வடிவில் அமைந்துள்ளன. சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பாடல்களை இவர் இயற்றியதாக அறிய முடிகின்றது. இதுவரை அச்சில் வெளிவந்த இவரது நூல்களின் எண்ணிக்கை 75 ஆகும்.

கல்விப் பணி

மயிலாடுதுறையில் பலகாலம் தங்கியிருந்த இவரது புலமையை அறிந்து நாடிவந்த பல மாணவர்களுக்கு பொருள் எதிர்பாராமல் தமிழ் கற்பித்தார். பணம் பெற்றுக்கொண்டு பாடம் சொல்லிக் கொடுக்கும் பழக்கம் இவரிடம் இல்லை. தன்னிடம் கல்வி பயில வரும் ஏழை மாணவர்களைச் சொந்தப் பிள்ளைகளைப் போலக் கருதி உணவும் இடமும் அளித்துக் குருகுல முறையில் பாரபட்சமின்றிக் கல்வி புகட்டினார். கவிதைகள் பாடிச் சன்மானமாகப் பெற்ற செல்வத்தைக் கொண்டே இவர் தனக்கும் தன் மாணாக்கர்க்கும் செலவழித்தார். இவரிடம் பயின்ற மாணவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் உ.வே.சாமிநாத ஐயர்,சோடசாவதானம் தி. க. சுப்பராய செட்டியார், குலாம் காதர், நாவலர், சவுரிராயலு நாயக்கர் ஆகியோர் ஆவர்.

'தாயைவிட என் மீது அதிக அன்பு கொண்டிருந்தவர் என் ஆசான்' என்று உ.வே.சா. இவரைக் குறிப்பிட்டுள்ளார். இவரது படைப்புகள் 42ஐ ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளை பிரபந்தத் திரட்டு என்னும் பெயரால் இரு தொகுதிகளாக உ.வே.சா. வெளியிட்டுள்ளார். திரிசிபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் என்ற பெயரில் இவரது வாழ்க்கை வரலாற்றை உ.வே.சா இரு பாகங்களாக விரிவாக எழுதி வெளியிட்டார். இந்நூலே இவரைப்பற்றி அறிந்து கொள்ள உறுதுணையாக உள்ளது.










மகாவித்துவான்
மீனாட்சி சுந்தரம் பிள்ளை
மாணவனிடம் காட்டிய அன்பு
குட்டிக்கதை


திருப்பெருந்துறைப் புராணம்


மகாவித்வான்
மீனாட்சிசுந்தரம் பிள்ளை
ஆய்வுமாலை
2000


தமிழ் மொழி வரலாறு
தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்


பெரும்புலவர்
மீனாட்சிசுந்தரம் பிள்ளை
முனைவர் வே.இரா.மாதவன்


6 April 1815
மீனாட்சி சுந்தரம் பிள்ளை
பிறந்த தினம் இன்று
'Mahavidwan'
Meenakshi Sundaram Pillai
On His Birth Anniversary

(😊)(😊) @ (😊)(😊) @ (😊)(😊)